# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

************

முறையீட்டு மனு எண்: 038 /2016/ந

ஆணை எண்: 105 /2016

நாள்: 03 /06 /2016

தினமலர் நாளிதழ்
செய்தி நாள்: 18.01.2016

– மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
திருவேற்காடு நகராட்சி,
திருவேற்காடு, சென்னை.

– எதிர் மனுதாரர்

## ஆணை

2014–ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் பிரிவு 7(1) ன் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 18.01.2016 அன்று தினமலர் நாளிதழில் ''பூந்தமல்லி திருவேற்காட்டை இணைக்கும் மாதிராவேடு கீழ் மட்ட பாலத்தின் தடுப்புக் கம்பிகளும் முற்றிலுமாக சேதமடைந்துள்ளன. இதனால் பாலத்தின் மீது பயணிப்போர் கூவம் ஆற்றில் தவறி விழும் நிலை உள்ளது'' என்ற தலைப்பில் வரப்பெற்ற செய்தியின் அடிப்படையில் இதனை இம்முறைமன்ற நடுவம் தானாக முன்வந்து புகாராக எடுத்துக் கொண்டு முறையீட்டு மனு எண்.038/2016 ஆக பதிவு செய்தது.

இப்பொருள் குறித்து பெறப்பட்ட அறிக்கைகள், வாக்குமூலங்கள் மற்றும் விசாரணைகளின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு இம்முறை மன்ற நடுவம் கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

2) 18.01.2016 நாளிட்ட தினமலர் நாளிதழில் திருவேற்காடு மற்றும் ஆவடி, பூந்தமல்லியை இணைக்கும் வகையில் உள்ள கூவம் ஆற்றின் மீதான தரைப்பாலங்கள் சேதமடைந்த நிலையில் உள்ளது குறித்தும் திருவேற்காடு வீரராகவபுரத்தை இணைக்கும் தரைப்பாலம் மற்றும் பூந்தமல்லி திருவேற்காட்டை இணைக்கும் மாதிராவேடு தரை மட்ட பாலம் சேதமடைந்த நிலையில் உள்ளது குறித்தும் பொதுப்பணி துறை தான் சீரமைக்க முடியுமென நகராட்சி தெரிவிப்பதாகவும் வரப்பெற்ற படத்துடன் கூடிய செய்தியின் மீதான அறிக்கை திருவேற்காடு நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 18.01.2016 நாளிட்ட அறிவிப்பாணையின் மூலம் கோரப்பட்டது.

3) இப்பொருள் குறித்து அறிக்கை வரப்பெறாத நிலையில் 12.05.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு திருவேற்காடு நகராட்சி ஆணையருக்கு முறை மன்ற நடுவத்தால் 01.04.2016 அன்று அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டது. அதன் பின்னர் நடைபெற்று முடிந்த சட்ட மன்ற பொதுத் தேர்தலை கருத்தில் கொண்டு மேற்படி விசாரணை 31.05.2016 தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4) 31.05.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு திருவேற்காடு நகராட்சி ஆணையர் ஆஜராகி தனது தரப்பிலான வாக்குமூலத்தினையும், அறிக்கையினையும் தாக்கல் செய்தார். நகராட்சி ஆணையரது வாக்குமூலத்தில் கீழ்கண்டவாறான தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

> “விசாரணைக்குட்பட்ட பாலங்கள் பொதுப்பணித்துறை மற்றும் மாநில நெடுஞ்சாலைத் துறையை சார்ந்ததாகும். இது குறித்து மாநில நெடுஞ்சாலைத் துறையை தொடர்பு கொண்டு விவரம் பெறப்பட்டதில் ரூ.6 கோடி மதிப்பீட்டில் பாலத்தின் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் அனுமதிக்காக சமர்ப்பித்துள்ளதும் கூவம் ஆற்றின் குறுக்கே திருவேற்காடு வீரராகவபுரம் இணைக்குமிடத்தில் உயர்மட்ட பாலம் அமைக்க சுமார் 5 கோடி மதிப்பீட்டில் பொதுப்பணித்துறை தலைமை பொறியாளரால் அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது’’.

மேலும், மேற்படி பணிகளுக்கான அனுமதியினைப் பெற்று விரைந்து முடிக்க தொடர்புடைய துறைகளை தொடர்ந்து தொடர்பு கொண்டு வலியுறுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும் நகராட்சி ஆணையரால் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

5) திருவேற்காடு நகராட்சி ஆணையரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் இப்பொருள் தொடர்பாக நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறை அலுவலகங்களிலிருந்து பெறப்பட்ட பதில் விவரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளைக் கொண்ட உள்ளாட்சி அமைப்புகளே அந்தந்த பகுதி மக்களின் நேரடி கவனத்திற்கும் பொறுப்பிற்கும் வரக்கூடியவை என்பது முறைமன்ற நடுவத்தால் விசாரணையின்போது சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே, மேற்படி பொது நலன் சார்ந்த பணிகளை விரைந்து முடிக்க ஏதுவாக சம்பந்தப்பட்ட துறைகளை வலியுறுத்தும் பொருட்டு உரிய வகையில் நடவடிக்கை எடுக்கவும் நகராட்சி நிர்வாகத் துறை மூலம் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு வலியுறுத்தி அனுப்பி வைத்திடவும் உரிய நடவடிக்கைகளை உடன் மேற்கொண்டிடவும் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது.

2016–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணை இடப்படுகிறது.

ஒம்/...
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

பெறுநர்:
நகராட்சி ஆணையர்,
திருவேற்காடு நகராட்சி,
திருவேற்காடு, சென்னை.

நகல்:

1. கோட்டப் பொறியாளர்,
   நெடுஞ்சாலைத் துறை,
   திருவள்ளூர் மாவட்டம்.

2. செயற்பொறியாளர்,
   கொசஸ்தலையாற்று வட்டம் பொதுப்பணித்துறை,
   நீர்வள ஆதார அமைப்பு, திருவள்ளூர்.

3. நகராட்சி நிர்வாக ஆணையர்,
   சேப்பாக்கம், சென்னை– 600 005.